செ.வெ.எண். 30/செப்டம்பர் தேதி : 11.09.2016

**பத்திரிக்கைச் செய்தி**

## தருமபுரி , நல்லம்பள்ளி, பென்னாகரம், காரிமங்கலம், பாலக்கோடு ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 1799 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.





தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், காரிமங்கலம், பாலக்கோடு ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 1799 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாக்களில் தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், காரிமங்கலம், பாலக்கோடு ஆகிய 5 வட்டங்களுக்குட்பட்ட 1728 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 45 பயனாளிகளுக்கு பல்வேறு உதவித் தொகைகளுக்கான ஆணைகளையும், 26 பயனாளிகளுக்கு இணையதள வழி பட்டா மாறுதல் உத்தரவுகளும் என மொத்தம் 1799 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய நடுத்தர மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய பயிர் கடன் மற்றும் நீண்ட கால கடன் தள்ளுபடி, மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, விலையில்லா ஆடு மற்றும் கறவை பசுக்கள், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

தருமபுரி மாவட்டத்தில் 1,047 நியாய விலைக்கடைகளின் மூலம் உணவுப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன் மூலம் 3 இலட்சத்து 97 ஆயிரத்து 239 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். 53,323 குடும்ப அட்டைதாரர்கள் வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கான அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் 35 கிலோ அரிசி விலையில்லாமல் மாதந்தோறும் பெற்று வருகின்றன. 2011 முதல் 2016 வரை 19 ஆயிரத்து 288 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது காரிமங்கலம், பாலக்கோடு, தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம் ஆகிய 5 வட்டங்களுக்குட்பட்ட மக்களுக்கு 1728 குடும்ப அட்டைகள் 2-ம் கட்டமாக வழங்கியுள்ளோம். ஏற்கனவே அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளுக்கு 3500 குடும்ப அட்டை வழங்கியதை சேர்த்து கடந்த 100 நாட்களில் மட்டும் 5500 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தருமபுரி மாவட்டத்திற்கு அதிக அளவில் பகுதி நேர நியாய விலைக்கடைகள் அமைத்து தந்துள்ளார்கள். மாதந்தோறும் விலையில்லாமல் 20 கிலோ அரிசியும் வழங்கி வருகிறார்கள். வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் அம்மா திட்ட முகாம்களில் 11 ஆயிரத்து 999 மனுக்கள் பொதுமக்களிடம் பெறப்பட்டு அம்மனுக்கள் மீது அன்றைய தினமே குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாதந்தோறும் அனைத்து வட்டங்களிலும் வட்டத்திற்கு ஒரு கிராமம் என்ற முறையில் இரண்டாவது சனிக்கிழமைகளில் பொது விநியோகத்திட்ட அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று குடும்ப அட்டைகளில் தேவையான மாற்றங்கள் செய்ய 4118 மனுக்கள் பெற்று அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பிப்பவர்கள் உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்தால் அம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர் மூலம் தீர்வு காணப்பட்டு அவர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பேசினார்.

இவ்விழாக்களில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன், அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.தொ.மு. நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், தருமபுரி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. நிர்மலா கோவிந்தசாமி, தருமபுரி நகரமன்ற தலைவர் திருமதி. சுமதி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மு.பிச்சைராமன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு. டி.ஆர். அன்பழகன், மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. பொன்னுவேல், தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, வட்டாட்சியர்கள் திரு. ராஜசேகரன், திரு. கண்ணன், திரு. சரவணன், திரு. மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.